மாணவர்களில் சுமார் 70 பேர், உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்களாக இருக்கவேண்டும். அதேபோன்று இரண்டு பள்ளிகளுக்கும் இடையில் 5 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்திலே, இடவசதிகளை ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையிலே அந்தப் பள்ளிகளைத் தரமுயர்த்துவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 371, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

371—

மாணவர் விடுதி

***1428—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணப்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணப்பாக்கத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2015 செப்டம்பர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று வாழ்ந்து சரித்திர சாதனை படைத்துவரும் தாயே! இந்தியாவிலேயே தொழில் உற்பத்தியில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, சுமார் ரூ.2,42,160 கோடிக்கு முதலீடுகளை ஈர்த்த சரித்திர தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்குப் பாடப் புத்தகம், மடிக்கணினி, சீருடைகள், கல்வி உதவித் தொகை, கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள் என அனைத்தையும் வழங்கி, கல்வியைத் தரும் எங்கள் மகா சரஸ்வதியே! தாயே, உம் தடம் பதிக்கும் பாதையில் தவம் கிடக்கும் எங்களின் வாழ்விற்கு ஆதாரமாய் விளங்கும் புண்ணியத் தீர்த்தமே, எங்கள் அம்மாவே! தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் தாயே. கடவுளிடம் வரம் கேட்டால்கூட கிடைக்காது. ஆனால், எங்கள் குலதெய்வம் அம்மா அவர்கள் கேட்ட வரங்கள் அனைத்தையும் உடனுக்குடன் வாரி வழங்கும் கருணை தெய்வம். (மேசையைத் தட்டும் ஒலி)*

எனது உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் அனைத்துத் துறைகளின் மூலமாக பல நலத் திட்டங்களை அள்ளித் தந்து, கல்வித் துறையில் மாபெரும் புரட்சியைச் செய்து, கல்வியில் பின்தங்கியிருந்த உளுந்தூர்பேட்டையை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்ற எங்கள் அன்னையே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், சரவணப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 1,000 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியைச் சுற்றியுள்ள பெரியசெவலை, அரும்பட்டு, மாதம்பட்டு, பருகம்பட்டு, கொரட்டூர், கொத்தனூர், ஆனைவாரி, இருந்தை, மடப்பட்டு, கருவேல்பாளையம், சின்ன ஆனைவாரி, கிரிமேடு, தடுத்தாட்கொண்டூர் ஆகிய கிராமங்களிலிருந்து நிறைய மாணவர்கள் இப்பள்ளியில் கல்வி பயின்று வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, பரிசீலிக்கப்படுமென்று சொல்லியிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டிலேயே அங்கே

2015 செப்டம்பர் 29]

மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, இந்த நிதியாண்டிலேயே நிதிநிலைமைக்கேற்ப, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உயர் கல்வியை உலக அளவிலே உயர்த்திக் காட்டிய உன்னதத் தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி கடந்த 4 ஆண்டுகளாக சிறப்பான முறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியிலே 2,000 மாணவ, மாணவியர் படித்து

வருகின்றார்கள். அந்த மாணவர்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிக் கொடுக்க முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டு, பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 372, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

372—

டயாலிசிஸ் சிகிச்சை

***14101—திரு. ம. கலை அரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிசிஸ் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS